OS.No.:29/2020

நாள் : 01.03.2024

பி.வா.சா. :1

பெயர் :திராவிடச்செல்வி

முதல் விசாரணை அனுமதியுடன்

நான் ஆவணங்களை தாக்கல் செய்ய வாதிக்கு அறிவிப்பு கொடுத்து வாதி தரப்பில் தாக்கல் செய்த வங்கிகணக்கு பட்டியல் **பி.சா.ஆ.7**

குறுக்கு விசாரணை

இந்த வழக்கில் உள்ள கடனுறுதிசீட்டு மற்றும் காசோலையில் உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல. எனது முதல் விசாணை வாக்குமூலம் மற்றும் எதிர்வழக்குரை ஆகியவற்றில் மேற்கண்ட ஆவணங்களில் உள்ள கையொப்பம் என்னுடையது என்று குறிப்பாக நான் மறுத்துக்கூறவில்லை என்றால் சரியல்ல. இரண்டு ஆவணங்களிலும் உள்ள கையொப்பம் என்னுடையது தான் என்று எதிர்வழக்குரை நிருபண வாக்குமூலம் ஆகியவற்றில் ஒப்புக்கொண்ட பின் தற்போது அதை மாற்றி புதிதாக் சாட்சியளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் ஒன்று விட்ட சகோதரியின் கனவரின் சகோதர் செந்தில் வாதியின் மனவைி ராஜகுமாரியிடம் இருந்து 2012 ஆம் ஆண்டு பெற்ற ரூ. 12 லட்சம் கடனுக்கு இந்த வழக்கு கடனுறுதி சீட்டு மற்றும் காசோலையை பூர்த்தி செய்யமால் கையொப்பம் மட்டும் செய்து கொடுத்ததாக நான் எதிர்வழக்குரையில் சொன்னேன் என்றால் சரியல்ல. கையொப்பம் போடாமல் தான் கொடுத்தேன் என்று கூறியிருக்கிறேன். 14.05.2018 அன்று நான் வாதியின் வீட்டில் வைத்து பெற்ற கடன் ரூ.11 லட்சம் மற்றும் அதன் பின் தொடர்சியான இவ்வழக்கின் கடனுறுதி சீட்டு மற்றும காசோலை என்னால் ஏற்படுத்தி கொடுக்கப்பட்டது என்பது தெரிந்து விடும் என்பதால் முன்னுக்கு பின் முரணாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. 2012 ஆம் ஆண்டு பெற்ற கடனை செந்தில் தீர்த்துவிட்டார். எந்த ஆண்டு தீர்த்தார் என தெரியாது. செந்திலுடன் நல்ல உறவு முறையில் தான் இருந்து வருகிறேன். ஒரே வீட்டில் தான் வசிக்கிறேன். நான்

கூறுவது போல் ராஜகுமாரி மற்றும செந்திலுக்கும் 2012-ல் எந்த பணப்பரிவர்த்தனையும் நடைபெறவில்லை என்றும் இவ்வழக்கின் கடனுறுதி சீட்டு மற்றும் காசோலை பூர்த்தி செய்யமால் கொடுத்ததாக கூறுவது தவறு என்று சொன்னால் சரியல்ல. அதனால் தான் என்னால் செந்தில் பெற்ற கடனை எப்போது தீர்த்தார் என்று கூறஇயலவில்லை என்றால் சரியல்ல. 2018 நவம்பர் முதல் வாதி என்னிடம் பணம் கேட்டு மிரட்டினார். 1 லட்சம் கேட்டு மிரட்டினார். பூர்த்தி செய்யமால் கொடுத்த காசோலையை பயன் படுத்தி கூடுதல் பணம் கேட்பதாக வாதிக்கு நான் சட்டப்பூர்வமாக நடவடிக்கை எதுவும் துவக்கவில்லை. வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பினேன். காவல் கண்காணிப்பாளருக்கு மின்னஞ்சல் மூலம் புகார் அனுப்பினேன். முதலமைச்சர் தனிப்பிரிவுக்கும் அனுப்பினேன். நான் கூறுவது போல் வாதிக்கு வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு ஏது அனுப்பவில்லை என்றும் அவ்வாறு வாதிக்கு அறிவிப்பு அனுப்பினால் வாதி உரிய பதில் அனுப்பி விடுவார் என்ற அச்சத்தில் வாதி தவிர்த்த நடவடிக்கைகளை மேற்கொண்டதாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. 19.01.2019 31.01.2019 ஆகிய தேதிகளில் மயிலாடுதுறை காவல் நிலையத்திலும் கோட்டாட்சியர் முன்பும் இருதரப்பும் அழைத்து விசாரிக்கப்பட்டதாக கூறுவது வழக்கிற்காக கூறப்படும் பொய் என்றால் சரியல்ல. சாட்சி காமராஜ், எழுதிய சாட்சி ஸ்ரீதர் ஆகியோர்களை நான் வசந்தி மற்றும செந்தில் ஆகியோர் எங்கள் செல்வாக்கை பயன்படுத்தி அவர்களை எங்கள் வசப்படுத்திக் கொண்டு அவர்களை இவ்வழக்கில் சட்சியளிக்கவிடாமல் தடுத்தோம் எனறால் சரியல்ல. வாதி வழக்குரையில் கோரியுள்ள பரிகாரம கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.